★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.வின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

## இந்தி மொழியில் வரவு-செலவுத் திட்டமாம்!

இந்தி மொழியில் வரவு-செலவுத் திட்டப் பிரதிகள் அடுத்த ஆண்டுமுதல் உறுப்பினர்களுக்குக் கிடைக்குமாம்.

பெருமிதத்தோடு இந்தத் தகவலைத் தந்தாராம், இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக்!

இந்தி மொழியில் திட்டத்தைத் தயாரிக்க உண்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவாம்!

'உறுதிமொழி தர முடியாவிட்டாலும், வரவு-செலவுத் திட்ட நகலை இந்தி மொழியில் தருவது வரும் ஆண்டில் சாத்தியமே' என்று அவர் நம்பிக்கை தெரிவித்தாராம்!

மலர் 3] சென்னை: மாசி 4உ சனி (17—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 5உ ஞாயிறு (18—3—56) [இதழ் 235

### தேவிகுளம்-பீர்மேடு:

# எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும்

## டெல்லி சர்க்கார் முடிவு

## மாநிலப் புது அமைப்பு மசோதாவில் விளக்கம்

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் (கொச்சி) தமிழ் வட்டங்கள் குறித்து கேரள, தமிழக மாநிலங்களுக்கிடையே உள்ளது போன்ற மாநிலப் பிரதேச எல்லைகள் குறித்து இந்திய மாநிலங்கள் பல்வற்றிற்குமிடையில் இருக்கும் தகராறுகளை ஆராய்ந்து முடிவு கூறுவதற்குத் தேவையானால் எல்லைக் கமிஷன்களை நியமிப்பதாக மாநிலப் புது அமைப்பு மசோதாவில் டெல்லி சர்க்கார் தெரிவித்திருக்கிறார்கள்.

'தேவையானால், மாநிலங்களிடையே உள்ள பிரதேசத் தகராறுகளை ஆராய, இந்திய சர்க்கார் எல்லைக் கமிஷன்களை அமைக்கும்' என்றும் அந்த மசோதா கூறுகிறது.

எனவே, தேவிகுளம்-பீர்மேடு முதலிய தமிழ் வட்டங்கள் குறித்துத் தமிழ்நாடு—கேரள மாநிலங்களிடையே உள்ள தகராறினைத் தீர்த்து வைக்க, டெல்லி எல்லைக் குழு நியமிக்கும் என்று நம்ப இடமிருக்கிறது.

### மாநிலங்களின் எல்லை

சிறு மாறுதல்கள் ஏற்படுமாம்?

நிர்வாக வசதியை யொட்டி சில மாநிலங்களின் எல்லைகளில் சிற்சில சிறிய மாற்றங்கள் செய்ய வேண்டி வரலாம் என, இந்தியப் பேரரசினர் எதிர்ப்பார்க்கின்றார்களாம். அவசியமாயின் பின்னர் ஒரு கட்டத்தில் சர்க்கார் எல்லைக் குழுக்கள் ஏற்படுத்துவார்களாம்.

### ஒரே உயர் நீதிமன்றம்

பம்பாய் நகரம், மராட்டியம், குஜராத் ஆகியவற்றிற்கு ஒரே பொது உயர் நீதிமன்றம் அமையும் என்று மாநில புது அமைப்பு மசோதா கூறுகிறது.

## மாநிலப் புது அமைப்பில் டெல்லியின் முடிவுகள்

## 15 மாநிலங்கள், 7 மத்திய ஆட்சிப் பிரதேசங்கள்

## 5 மண்டலங்களாக இந்தியா பிரிக்கப்படுகிறது

### மக்கள் சபையில் மசோதா

மாநில புதுஅமைப்பு மசோதா டெல்லி மக்கள் சபை, மாநிலங்கள் சபை இரண்டிலும் நேற்று கொண்டுவரப் பட்டிருக்கிறது.

இந்தியாவில் 15 மாநிலங்கள் இருப்பது எனவும், 7 மத்திய சர்க்கார் நிர்வாகப் பிரதேசங்கள் இருப்பதெனவும் மசோதா கூறுகிறது.

மாநில புதுஅமைப்புக் குழுவின் சிபாரிசுகள், பல மாநிலங்களைப் பொறுத்து மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

பிரித்து அமைக்கப்படுகிற மாநிலங்களும், மத்திய சர்க்காரால் நிர்வகிக்கப்படும் பிரதேசங்களும் ஐந்து மண்டலங்களாக வகுக்கப்பட்டு, ஒவ்வோரு மண்டலத்திற்கும் ஒரு மண்டலக் குழு—ஆலோசனை கூறும் தன்மையதாய் மட்டும் அமையும் என்றும் மசோதா தெரிவிக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்திற்குள்ளும் அமையும், இதர மொழி பேசும் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்புகள் தருவதற்கும் ஏற்பாடுகள் இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. தாய் மொழியிலேயே கல்வி அளிப்பது போன்ற பாதுகாப்புகள் தருவதற்காகத் தொடர்புடைய அரசியல் சட்டங்கள் தகுந்த முறையில் திருத்தி அமைக்கப்படும் என்றும், சில மாநிலங்களுக்குச் சேர்த்து ஒரே கவர்னர், ஒரே உயர்நீதி மன்றம் முதலியன அமைப்பதற்கும், வழி செய்யப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பல மாநிலங்களிடையே உள்ள எல்லைத் தகராறுகள் சம்மந்தமாக ஆராய்வதற்குத் தேவையான இடங்களில் எல்லைக் கமிஷன்களை டெல்லி சர்க்கார் நியமிக்கும் என்றும் மசோதா தெரிவிக்கிறது.

1. ஆந்திரா — தெலிங்கானா; 2. அசாம்; 3. பீகார்; 4. குஜராத்; 5. கேரளம்; 6. மத்தியப் பிரதேசம்; 7. சென்னை; 8. மகாராட்டிரம்; 9. மைசூர்; 10. ஒரிசா; 11. பஞ்சாப்; 12. இராஜஸ்தான்; 13. உத்திரப் பிரதேசம்; 14. மேற்கு வங்கம்; 15. ஜம்மு - காஷ்மீர் என்ற 15. மாநிலங்களும்—1. பம்பாய்; 2. டில்லி; 3. இமாசலப் பிரதேசம்; 4. மணிப்பூர்; 5. திரிபூரா; 6. அந்தமான்-நிகோபார்; 7. லட்சத்தீவுகள், மினிகாய்-அமீன்தீவ் தீவுகள் — ஆகிய 7 மத்திய சர்க்கார் நேரடி ஆட்சிப் பிரதேசங்களும் உருவாக்கப்படுகின்றன.

இவை, ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்படுகின்றன.

**வடக்கு மண்டலம்:**

பஞ்சாப், இராஜஸ்தான், ஜம்மு-காஷ்மீர், டில்லி, இமாசலப் பிரதேசம்.

**மத்திய மண்டலம்:**

உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம்.

**கிழக்கு மண்டலம்:**

பீகார், மேற்கு வங்கம், ஒரிசா, அசாம், மணிப்பூர், திரிபூரா.

**மேற்கு மண்டலம்:**

மகாராட்டிரா, குஜராத், பம்பாய்.

**தெற்கு மண்டலம்:**

ஆந்திரா — தெலிங்கானா, சென்னை, மைசூர், கேரளம்.

இப்படி மாநிலங்கள் மண்டலங்களுக்குள் அடங்குகின்றன.

## பெல்லாரியில் ஆந்திரருக்கு பங்கு இல்லை

பெல்லாரி மாவட்டத்தின் சில பகுதிகள், ஆந்திர மாநிலத்துத் தரப்படவேண்டும் என்று மாநில புது அமைப்புக் குழு சிபாரிசுகளுக்கு மாறாக, பெல்லாரியில் ஆந்திரருக்குப் பங்கு இல்லை என்று டில்லி முடிவு செய்திருக்கிறது.

பெல்லாரி இப்போதிருப்பதைப் போலவே தொடர்ந்து மைசூரிலேயே இருக்கும் என்று கூறுகிறது.

## மாநிலங்கள் மீது மத்திய சர்க்கார் ஆதிக்கப்பிடிப்பு

### மண்டல சபை மூலம் வலுவாகும்?

உருவாகிற 15 மாநிலங்கள், 7 மத்திய ஆட்சிப் பிரதேசங்களும் 5 மண்டலங்களுக்குள் அமைக்கப்படுகின்றன.

இந்த மண்டலங்களுக்கென அமையும் மண்டல குழுக்கள், வெறும் ஆலோசனை சபைகளாகவே இருக்கும்.

இந்த மண்டல சபைகள், மாநிலங்கள்மீது மத்திய சர்க்கார் கொண்டுள்ள ஆதிக்கப் பிடிப்பை இன்னும் வலுப்படுத்துவனவாகவே அமையக்கூடியதாக இருக்கின்றன.

மாநிலங்கள், மத்திய சர்க்கார் ஆகியோரது பொதுவான நலன்களைக் குறித்து விவாதித்துத் தொடர்புடைய சர்க்காருக்கு ஆலோசனை கூறுவனவாக மட்டுமே மண்டலக் குழுக்களின் தன்மை இருக்கும்.

ஒவ்வொரு மண்டல சபையிலும் 1. குடியரசுத் தலைவர் நியமிக்கும் மத்திய சர்க்கார் மந்திரி ஒருவர்; 2. மண்டலத்திற்குள் அமையும் மாநிலங்களின் முதன் மந்திரிகள்; 3. அந்தந்த மாநில கவர்னர் நியமிக்கும் இரண்டு இரண்டு மந்திரிகள் (ஒவ்வொரு மாநிலத்திற்கும்); 3. மத்திய ஆட்சிப் பிரதேசங்களானால் அந்தந்தப் பிரதேசத்திலிருந்து ஒரு உறுப்பினர் (குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவர்); 4. கிழக்கு மண்டலத்தைப் பொறுத்து, பழங்குடி மக்கள் விவகாரங்களுக்காக அசாம் சர்க்காரின் ஆலோசகராக இருப்பவர், உறுப்பினராக இடம் பெறுவார்.

மத்திய சர்க்கார் மந்திரிதான், மண்டல சபையின் தலைவராக இருப்பாராம்.

## சென்னைக்கு டில்லி மானியமாம்!

புதுடில்லி, மார்ச். 16—

'பக்கிங்ஹாம்' கால்வாய், ஆந்திராவில் 160 மைல் நீளமும், சென்னை மாநிலத்தில் 100 மைல் நீளமும், சென்னைக்குத் தெற்கில் 65 மைல் நீளமும் இருக்கிறது.

'பக்கிங்ஹாம்' கால்வாய் முன்னேற்றம் பற்றிய ஆராய்ச்சியை நடத்துவதற்கென இந்திய சர்க்கார், சென்னை அரசியலாருக்கு ரூ. 15,000 மானியம் அனுமதித்திருக்கின்றனராம்.

ஆண்டு முழுமையும் கால்வாயில் போக்குவரத்து நடைபெறுவதற்கேற்ப அதை அபிவிருத்தி செய்வது, சென்னைத் துறைமுகத்துடன் இணைப்பது ஆகியவை 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள யோசனைகளில் அடங்கியுள்ளனவாம்.

## சட்ட சபைகளுக்கு ஒரு மாத அவகாசமாம்!

புதுடில்லி, மார்ச் 16—

மாநில சீரமைப்பு மசோதாவின் பரிசீலனையை மாநில சபைகள் ஏப்ரல் திங்கள் 16-ந் தேதிக்குள்ளாக முடிக்கவேண்டுமாம். நிதி மசோதா நிறைவேறியதும், மாநில சீரமைப்பு மசோதாவை சட்ட சபையில் பிரேரேபித்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இயலுவதற்கே இந்த ஒரு மாத அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாம்.

## 'விசால ஆந்திரம்' என்ற பெயர் இல்லை

### உயர் நீதிமன்ற அமைப்பிலும் மாறுதல்

ஆந்திர மாநிலத்துடன் தெலிங்கானா இணைந்து உருவாகும் விசால ஆந்திர மாநிலம், 'விசால ஆந்திரம்' என்று அழைக்கப்படமாட்டாதாம். அண்மையில் கூறப்பட்டபடி 'மகா ஆந்திரம்' என்று கூட அழைக்கப்படாதாம்! 'ஆந்திரா - தெலிங்கானா' என்று பெயரிடப்பட்டிருக்கிறது, புதிய மாநிலத்திற்கு —மசோதாவில்!

ஐதராபாத் நகரம், அந்த ஆந்திரா-தெலிங்கானா மாநிலத்தின் தலைநகராக அமையும் போது, அங்கேயே உயர்நீதி மன்றமும் அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, இப்போதுள்ள ஐதராபாத் உயர் நீதிமன்றம் கலைக்கப்பட்டு, கர்நூலில் உள்ள ஆந்திர மாநில உயர் நீதி மன்றத்தின் நீதி வழங்கும் பிரதேசம் புதிய மாநிலம் முழுவதற்குமாக விரிவாக்கப்படும் என்று மசோதா கூறுகிறது.

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—3—'56 கனி

# 'அறத்தின் நீங்கிய அரக்கன்'

(2)

இந்தியத் துணைக்கண்டத்தின் செல்வச் செழுமைக்கும், மக்களின் நல்வாழ்வுப் பெருக்கத்திற்கும் ஐந்தாண்டு திட்டங்கள் செயலாற்றப் [illegible]ன்றன என்று காங்கிரஸ் [illegible]க்கம் பேசித்திரிகிறது. மே[illegible] திட்டங்களின் விளைவாக [illegible]வொரு தனி நபரும் சொந்தத்தில் அடைந்துள்ள அபிவிருத்தி யாவை என்ற கேள்விக்கு காங்கிரஸ் கட்சியினிடமிருந்து நியாயமான விடை கிடைக்கவில்லையானாலும், மொத்தத்தில் திட்டங்களினால் ஏற்பட்ட பலாபலன்பற்றி அவர்கள் பீத்தித் திரியாத நாளே கிடையாது.

உண்மையைத் திறமையாக ஒழித்துக்கட்டி, மெய்போல் தோற்றந்தரும் தன்மையில் பொய்க்கு எப்படிக் கவர்ச்சிகரமான முலாமிட்டுக் காட்டுவது என்பதுபற்றிய அரிய பயிற்சியளிப்பதும், அந்தத் திட்டங்களில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்களில் ஒன்று போலும்! அதற்குத்தான் முதலிடம்கூட ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றே கொள்வதும் மிகையாகாது.

முதலிடம் பெற்றுள்ள, பொய்யை மெய்யாக்கிக் காட்டும் உயர்திட்டப் பயிற்சியில் நிதி அமைச்சர் தேர்ச்சிமிக்கவராகக் காணப்படுகிறார். அத்துறையில் போட்டியிட்டு அவரை வெல்லக்கூடிய வேறு ஒருவர், இந்த மண்டலத்தில் இனிப் பிறந்தால்தான் உண்டு என்றும் உறுதியாகக் கூறத்தக்க வகையில், நிதி அமைச்சரின் இமயமேறிய பித்தலாட்டம் இருக்கிறது!

பிப்ரவரி இருபதில் சென்னையிலும், தமிழ்நாட்டின் மற்ற இடங்களிலும் நடைபெற்ற பொது வேலை நிறுத்தங்கள் குறித்தும், பொதுவாக இரண்டு மூன்று இடங்களில் நடைபெற்றுள்ள தடியடிப் பிரயோகங்கள் பற்றியும், குறிப்பாகத் தம்மம்பட்டியிலும் - கள்ளக்குறிச்சியிலும் காமராசர் அரசாங்கம் நடத்தியுள்ள துப்பாக்கிப் பிரயோகக் கொலைச் செயல் குறித்தும், சென்னை சட்டசபையில் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அவைகளுக்குக் காமராசர் அரசாங்கசார்பில், நிதி அமைச்சர் தந்துள்ள பதில், உண்மையைத் திறமையாகக் கொலை செய்துவிட்டு, கவர்ச்சிகரமானப் பொய் கூறும் பயிற்சியில், அவர் பெற்றுள்ள ஒப்பற்ற ஆற்றலை விளக்குவதாக உள்ளது.

பிப்ரவரி இருபதாம் நாள் மாலை சென்னையில், குணக்குன்றும் கண்ணியத்தின் பிறப்பிடமுமான கூட்டணித் தலைவர் உயர்திருவாளர் பொன்னம்பல தியாகராசன் அவர்கள் தலைமையில், தமிழ் மக்கள் இரண்டு இலட்சத்திற்கு மேல், அரவமற்ற கடல் அலைபோல் ஆர்வத் திருஉருவுகளாய் அமைதியாக ஊர்வலம் சென்றனர். இத்தமிழ் மக்கள் பெருவெள்ளப் பெருக்கை, உண்மையை திரித்துக்கூறும் பொய்யிலே புழுத்தப் புழுவெனப் பெரும் புரட்டைப் பேசிவரும் வெள்ளை — வகுப்புவாத 'மெயில்' ஆங்கில ஏடுகூட, 'ஒரு இலட்சம் மக்கள் அமைதியாக ஊர்வலத்தில் சென்றனர்' என எழுதிக்காட்டியுள்ளது. பொய்யுள் புலவன் தானிருக்க, அக்கலையில் தன்னையும் ஒருவர் மிஞ்சிடப் பார்ப்பதோ, பார்க்கின்றேன் அவர்தம் திறம், சாய்க்கின்றேன் அவர்தம் கொட்டம்—எனச் சூளுரைத்துக்கொண்டு, 'ஐயாயிரம் மக்களே திவுத் திடலில் திரண்டிருந்தனர்' என்று சென்னை சட்ட அவையில் சாற்றியுள்ளார், கந்தத்திலும் காணப் பெருப் பெரும் பொய்யை, நிதி அமைச்சர் எனும் கற்பனைப் பெயர் சுமந்துகிடக்கும், அறத்தின் நீங்கிய அரக்கராம் கனம் சுப்பிரமணியம்!

அத்துடனும் அவரின் பொய் கூறும் சிறுமதி அடங்கித் தொலைக்கவில்லை! மேலும் செல்கிறது—விண் முட்ட நீளுகிறது!

தம்மம்பட்டியில், சென்னை 'மெயில்' இதழில் கண்டுள்ளபடி 150 பேர் பெரும் படையாய்ப் பாய்ந்துவந்து போலீசாரைத் தாக்க முயன்றனராம்! கனம் காமராசரின் பாதுகாப்புப் படை வரிசை தற்காத்துக் கொள்ளும் தகைமையுடன், தமிழ் மானம் தமிழ் நலம் காக்க முன்வந்தத் தக்க அறப்போர் வீரர்மீது, தொடுத்ததாம் துப்பாக்கிக் குண்டுகளை எனப் பிதற்றுகிறார், அரசாங்க அதிகாரிகளின் பாவைக் கூத்துப் பாவையாய், தலை கனத்துக் கொக்கரித்துக் கிடக்கும் நிதி அமைச்சராம் கோவைக் குமரர்!

தம்மம்பட்டித் தெருவில் தமிழ் மானம் காப்பதில் தமக்குரிய பங்கினை, பெரும் பொறுப்புடன் நிறைவேற்றி நின்ற தமிழ் மாவீரர் அனைவரும், 'பச்சைத் தமிழர்' காமராசர் பாதுகாப்புப் படை வீசிய துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகிப் பிணமாகி நிலத்தில் வீழவில்லையே எனும் அரிப்புக் கொண்டவர்போல், 'நால்வர்தான் குண்டடிக்கு ஆளாயினர், என ஈனகுரலில் எடுத்துக்கூறி, 'இரக்கமென்ற ஒரு பொருளிலா அரக்கர்' என்றச் சிறப்புத் தமக்கே பிறப்புரிமை, அதைத் தமக்களிக்க மறுப்பவரைப் புறமுதுகிடச் செய்து, பூரிப்புடன் வெற்றி வாகை சூடுவேன் என்று கர்ஜித்துள்ளார், அரசாங்க அதிகாரிகள் கை அம்பாய் நிதி மந்திரி எனப் பெயரைத் தாங்கிவரும் கனம் சுப்ரமணியம்!

அந்தகோ! தம்மம்பட்டித் தெருக்களில், தமிழ் நிலம் காக்கவும், தமிழ் வீரத்தை வடவர் கண்டு வெட்கவும், பிப்ரவரி இருபதில் அறப்போர் அணிவகுத்துச் சென்ற தமிழ் இளங்காளைகள் நால்வரை சுட்டுப் படுகாயப்படுத்தி வீழ்த்திவிட்டு, குருதிக் கறை படிந்த கையுடன், காவல்மிக்க கொலு மண்டபத்தில் நின்றுகொண்டு, ஆணவம் பேசுகின்றார், நிதி அமைச்சர்!

தம்மம்பட்டித் தெரு குருதி குழைந்து உலர்ந்துள்ள செம்மண் கூறும், அங்கு நடைபெற்றத் தப்பாக்கி வேட்டையின் உண்மை வரலாற்றினை! அக்குருதியை உலரவைத்தத் தீப்பிழம்பாம் ஞாயிறு உரைக்கும், தமிழ் குலக் காளைகளை, 'பச்சைத் தமிழர்' காமராசர் பாதுகாப்புப் படையினர், ஆடிய நரவேட்டையின் இரக்கமற்ற அரக்கத்தன்மையை!

நீதி தேவை—நடந்துள்ள மனித வேட்டையின் உண்மை வரலாறு தேவை. நடுநிலை பிறழ்ந்தறியாத நீதிபதியின் விசாரணைத் தேவை. தேவிகுளம் — பீர்மேடு என்றத் தமிழ் குறுநிலப் பகுதிகளைப் பெற்றுத் தரும் ஆற்றல், கனம் காமராசர் அவர்களுக்கு இல்லையானாலும், நியாயம் எவர் பங்கில் இருக்கிறது என்பதைக் கண்டறியும் சாதாரண நல்லுணர்வாவது அவருக்கு ஏற்படவேண்டும்!—ஏற்படுமா?

## உலகை அழிக்கவல்ல இறுதி ஆயுதம்!

### இராணுவ நிபுணர்கள் தரும் விளக்கம்

நியூயார்க், மார்ச் 13—

மணிக்கு 16,000 வேகத்தில் காற்றெனப் பறந்து சென்று, 5,000 மைல்களுக்கப்பால் உள்ள இடத்தில் நீர்வளிக் குண்டை வீசக் கூடிய பயங்கர 'ராக்கெட்' ஆயுதத்தைக் கண்டு பிடிப்பதே அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளின் இலட்சியமாம். இந்த ஆயுதம் அமெரிக்காவின்மீது வீசப்பட்டால் ஒரு கோடி முதல் ஐந்து கோடிவரை மக்கட் சேதம் ஏற்படுமாம்; அமெரிக்க தொழிற்சக்தியில் மூன்றிலொரு பகுதி அழிமாம்; சிற்சில பகுதிகள் கதிரியக்கம் நிறைந்த பாலைவனங்களாகி விடுமாம். இவ்வாண்டு முடிவிற்குள் இத்தகு ஆயுதத்தை, ரஷ்யா பயன்படுத்திப் பார்க்கும் அபாயம் இருக்கிறதாம்!

இவ்வாறெல்லாம் அமெரிக்க இராணுவ துணைக் குழுத் தலைவர் 'செனட்டர்' ஹென்றி எம். ஜாக்சன் கூறியுள்ளாராம்.

ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்தின்மீது பிரயோகிக்கக்கூடிய அழிவுச் சக்தியைக் கண்டறிவதில் அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்குமிடையில் தீவிரப்போட்டி நிகழ்ந்து வருகிறதென ஹான்சன் டபிள்யூ பால்ட்வின் என்ற அமெரிக்க இராணுவ நிபுணர் தெரிவித்துள்ளாராம்.

இதைத்கொண்டு உலகின் எந்தப் பகுதியையும் அழித்துவிட முடியுமென கருதப்படுகிறதாம். 'இந்த இறுதி ஆயுதமே அகிலத்தை ஆளும்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளாராம்.

## இரத்தக் கொதிப்புக்கு அரிய மருந்து

### 'சர்ப்ப கந்த வேர்' உலக முக்கியத்துவம் பெறுகிறது

'சர்ப்பகந்த வேர்' (பாம்புகளாக்காய்) இப்போது உலக முக்கியத்துவம் அடைந்துவிட்டது. இரத்தக் கொதிப்பைக் குணப்படுத்துவதற்கு அதிலிருந்து சிறந்த மருந்து தயாரிக்கலாமென்று தெரியவந்திருப்பதுதான் அதற்குக் காரணம். தூக்கமின்மை, சித்த சுவாதீனம் ஆகிய நோய்கள் விஷயத்திலும் நரம்புத் துடிப்பைச் சாந்தப்படுத்த அது உதவுகிறது.

தற்காலத்தில் இரத்தக் கொதிப்பு ஒரு தீவிர நோயாக இருக்கிறபடியால், இந்த வேரிலிருந்து கிடைக்கிற மருந்துக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுவருகிறது. அது ஒரு அரிய பொருளாகப் பாவிக்கப்படுகிறது. உலகம் முழுவதுக்குமே இந்தியாதான் இந்த அபூர்வ மூலிகையை விநியோகம் செய்கிறது.

வெளிநாடுகளிலிருந்து இந்தச் சரக்குக்கு வருகிற ஆர்டர்களைப் பூர்த்தி செய்யக் கூடியபடி நம் காடுகளில் அது ஏராளமாக வளரவில்லையாம்; எனவே, அதை இன்னும் அதிக அளவில் பயிரிடுவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்படக்கூடும்.

# இலங்கை சர்க்காரின் அநாகரீகப் போக்கு!

## சிங்களவர் அல்லாதார் அரிசி வர்த்தகம் நடத்துவதற்குத் தடை

மொத்தமாகவோ, சில்லரையாகவோ இலங்கையில் அரிசி விற்பனையாளர்கள் சிங்களவராய்த்தான் இருக்க வேண்டும் என்று இலங்கை மந்திரி சபை முடிவு செய்திருக்கிறதாம்.

உணவுக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ், அரிசி விநியோகத்திற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிற சிங்களவரல்லாத சுமார் 700 வியாபாரிகள்—பெரும்பாலானோர் இந்தியர்கள், தங்கள் கடைகளை இந்த மார்ச் திங்கள் இறுதியில் மூடிவிட வேண்டும் என்று 'நோட்டீஸ்' கொடுக்கப்பட்டிருக்கின்றனராம்.

'அனுமதியைப் பிடுங்கிக்கொள்வதற்காகத் தரப்பட்டிருக்கும் காலம் போதுமானதல்ல' என்று பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்டுக்கொண்டதின்பேரில், அவர்களது அனுமதி காலம் ஏப்ரல் இறுதிவரை நீடிக்கப்பட்டதாம்.

# மத்திய சர்க்காரின் மாற்றுந்தாய் மனப்போக்கு

### மக்கள் சபையில் மலபார் உறுப்பினர் கண்டனம்

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை மாகாணம், மத்திய சர்க்காரால் மாற்றுந் தாய் மனப்போக்குடன் நடத்தப்பட்டிருக்கிறது; என்னுடைய மாவட்டமான மலபாருக்கு திட்டத்தில் எந்த ஒரு சிறு பங்கும் கிடைக்கவில்லை"

என்று, பி. போக்கர் என்ற முஸ்லீம்லீக் உறுப்பினர் மக்கள் சபையில் பேசியிருக்கிறார்.

# ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகும் வேலையில்லாக் கொடுமை

## ஏற்றத் தாழ்வுகள் அகல வழி என்ன?

### மக்கள் சபையில் காட்கில் கருத்துரை

"செல்வ நிலையிலும் வருமானத்திலும் இன்று சமூகத்தில் நிலவும் பெரும் ஏற்றத் தாழ்வுகளை, அதிகச் செல்வம் படைத்தோர்—உயர்ந்திருப்போருக்கு அதிகமான வரி விதிப்பதன் மூலம் குறைக்க முடியும்—குறைக்க வேண்டும்; ஏனெனில், அப்போதுதான் சமூக நலன்கள், குறைவான வருமானமுடையவர்களுக்கு மலிவாகவோ, இலவசமாகவோ தரப்பட முடியும்.

"முதல் ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்றத்திற்குப் பிறகும் வேலையில்லாக்கொடுமை வெகுவாக இருக்கிறது. இப்படி வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதற்குக் காரணம், இந்தியாவில் தனியார் துறை செல்வாக்குடனிருப்பதும், சர்க்கார் பல தொழில்களை மேற்கொள்ளாமலிருப்பதும்தான். இந்தியா போன்ற பின் தங்கிய நாடுகளில் சோஷலிசத்தை அடைவதற்கும் படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இரண்டாம் திட்ட முடிவில், தனியார் துறை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே இயங்குவதாக இருக்க வேண்டும். இப்போது நாம் அனுமதித்துக் கொண்டிருப்பதைப்போல தனியார் துறையை தொடர்ந்து அனுபதிப்பது என்பது ஒரு பெரும் குற்றமாகும்.

"வரவு - செலவுத் திட்டத்திற்கு பொதுவாக நான் ஆதரவு தருவது, அதன் உள்ளடக்கத்திற்காக அல்ல; மாறாக, அதில் தரப்பட்டிருக்கும் வாக்குறுதிகளுக்காகத்தான்."

என்று, என் வி. காட்கில் (காங்கிரஸ்) மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# இரண்டாம் திட்டத்தின் பலன்

## எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது

### காங்கிரஸ் பொதுச்செயலாளர் கருத்து

"இரண்டாம் திட்ட முடிவில் ஒரு கோடி பேருக்கு மட்டுமே வேலைதர முடியும் என்றால், இன்று என்ன நிலை நாட்டிலிருக்கிறதோ அதே நிலைதான் இருக்கும்; எவ்வித முன்னேற்றமும் காணமுடியாது. அப்படி ஒரு நிலை மக்களுக்கு உற்சாகமூட்டக்கூடியதாயிருக்க முடியாது.

"சம்பளக் கமிஷன் ஒன்றை நியமித்து, சம்பள விகிதங்களில் உள்ள பெரும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வழி காணவேண்டும்."

என்று காங்கிரஸ் பொதுச் செயலாளரான ஸ்ரீமன் நாராயண் மக்கள் சபையில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

## இந்தியாவுக்குப் பிரிட்டன் தரும் உதவி

### மவுண்ட்பேட்டன் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 15—

இந்தியாவுக்குத் தொழில் நுணுக்க நிபுணர்களை அனுப்பி உதவவும், பயிற்சி நிறுவனங்களுக்கும், ஆராய்ச்சிசாலைகளுக்கும் எல்லாவிதப் பயிற்சி தளவாடங்கள் தந்துதவவும் வரும் ஆண்டுகளில் ரூ. 9 கோடிக்கும் அதிகமாக இந்தியாவுக்கு ஒதுக்கியுள்ளதாக மவுண்ட்பேட்டன் பிரபு அறிவித்தாராம்.

### நெல் உற்பத்தி—எவ்வளவு தெரியுமா?

புதுடில்லி, மார்ச் 13—

கடைசியாகக் கிடைத்த மதிப்பீடுகளின்படி, இந்தியாவில், 1955—56-ம் ஆண்டில், மொத்தம் 2,38,00,000 டன் நெல் உற்பத்தியாகுமென்று தெரியவந்துள்ளதென்றும், அது, நாட்டின் நடப்புத் தேவைகளுக்குப் போதுமானதென்றும், மத்திய துணை உணவு—விவசாய மந்திரி மாநிலங்கள் சபையில் அறிவித்துள்ளார்.

### நேரு — ஐசன்ஹோவர் சந்திப்பு?

நியூயார்க், மார்ச் 15—

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவருடன் உரையாடல் நிகழ்த்தப் பிரதமர் நேரு ஜூன் 2-வது வாரத்தில் வாஷிங்டனுக்கு வரக்கூடும் என ஐ. நா. இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றனவாம்.

## அமைதியாக அர்த்தால் நடத்தியோருக்கு தண்டனை

### துறையூரில் 18 தோழர்களுக்குச் சிறை

துறையூர், மார்ச். 13—

பிப்ரவரி 20-ந் தேதி நடைபெற்ற அர்த்தாலை ஒட்டி கீழக்கண்ட 18 தோழர்களை அன்று மாலைவரை போலீஸ் நிலையத்தில் வைத்திருந்து, பெயர்களை எதிக்கொண்டு விட்டுவிட்டனர்.

மேற்படி 18 தோழர்கள் மீதும் இ. பி. கோ. 143, 34, ஆகிய பிரிவின்படி குற்றங்கள் சாட்டி 13-3-56 பகல் 12 மணிக்கு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கில், தோழர்களுக்கு 3 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தோழர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் தண்டனையை ஏற்று சிறை புகுந்தனர்.

மேற்கொண்டு 19-ந் தேதி இரவு கைதானவர்களின் பெயரை அன்று இரவே சுவர்களில் எழுதியதின் காரணமாக தோழர் ஒய். உசேன் என்னும் தி. மு. க. தோழரை 15-ம் தேதி கோர்ட்டில் ஆஜராகும்படி சம்மன் அனுப்பி இருக்கிறார்கள்.

சிறை புகுந்த 18 தோழர்கள்:—ஏ. அண்ணாமலை பிள்ளை (சோ); தி. மு. க. தோழர்கள்—கே. ராஜு (ஆசாரி), எஸ். கிருஷ்ணசாமி, ஏ. காசிநாதன், பி. அருணாசலம், டி. தம்பிதுரை, எம். சிங்காரம், என். கோவிந்தசாமி, ஜி. சேஷன், கே. ராஜகோபால், ஆர். எஸ். மணி, எஸ். கோவிந்தன், சின்னசாமி, வரதன், ஜோசப், பங்காருசாமி, வாசுதேவன், சௌண்டையன்.

## ஆனையாம்பட்டித் தோழர்கள் மீதும் அடக்குமுறைக் கணை

### இரு தோழர்களுக்கு ஒரு வார சிறை

பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தாலில் ஆனையாம்பட்டியில் கடைகள் முழுதும் மூடப்பட்டுக் கிடந்தன. கெங்கல்லி கிராமத்திலும் இவ்வாறே கடைகள் மூடப்பட்டன. 19—2—56ந் தேதி அன்றிரவு 11 மணிக்கு தி. மு. க. உறுப்பினர் டி. ஆர். மாரியப்பா, ஆர். சீனிவாசன் (கம்யூனிஸ்டு) ஆகிய இருவரையும் முன்னெச்சரிக்கையாகக் கைது செய்தனர்.

20—2—56 காலை சுமார் 8 - மணிக்கு, தி. மு. க. பொருளாளர் பி. தங்கராசு தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய வீதிகளின் வழியே வரும்போது, தி. மு. க. செயலாளரும், ஆனையாம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவருமான ஆர். மாரிமுத்து, எஸ். ராமு கோனார் (கம்யூனிஸ்டு; ஊராட்சி மன்ற உறுப்பினர்) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் ஆத்தூருக்கு அழைத்து வரப்பட்டனர்.

பிப். 20 காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை, தோழியர் அகிலாண்டம்மையார் - கிரி அவர்கள் தலைமையில் தாய்மார்கள் நூறு பேரும் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களும் 'தோழர்களை விடுதலை செய்' என்று முழக்கமிட்டுச் சென்றனர்.

அன்று மாலை நான்கு மணிக்குக் கைது செய்யப்பட்ட டி. ஆர். மாரியப்பா, ஆர். சீனிவாசன் ஆகியவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

21—2—56ல், தோழர்கள் ஆர். மாரிமுத்து, ராமு கோனார் ஆகிய இருவரும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர்.

13—3—56ல், ஆத்தூர் சப்-மாஜிஸ்திரேட் அவர்கள் இருவருக்கும் தலா ரூ. 5 அபராதம் விதித்தார். அபராதம் கட்ட மறுத்து, தோழர்கள் 1 வாரம் சிறை புகுந்தனர்

## பஞ்சாபிலும் 'பட்ஜெட்' விபரங்கள் களவாடப்பட்டன?

### சட்ட சபையில் பிரரேபணைகள் தோல்வி!

சந்திகார், மார்ச் 15—

பஞ்சாப் மாநிலத்திலும் வரவு-செலவுத் திட்டம் (மாநிலத் திட்டம்) முன்கூட்டியே வெளியானதாகக் கூறப்படுகிறது.

மாநில வரவு-செலவுத் திட்டம் சட்டசபையில் தாக்கலாகுமுன் வெளியானதாகக் கூறப்படுவதால், இது குறித்து உரிமைக் கமிட்டி விசாரணை செய்ய வேண்டும் என ஒரு சோஷலிஸ்டு உறுப்பினர் இரண்டு பிரரேபணைகள் கொண்டு வந்தார்.

சபைத் தலைவர், பிரரேபணை சரிதான் என்றும், ஆனால், உரிமைக் கமிட்டி இது குறித்து விசாரிக்க வேண்டும் என்று கோருவதற்கு முன் சபையின் அனுமதியைக் கோரியிருக்க வேண்டும் என்றும் கூறினாராம்.

பின்னர் சபை, வாய்மொழி வாக்கு மூலம் இரு பிரரேபணைகளையும் நிராகரித்தது என்று தெரியவருகிறது.

## போபாலில் ஒரு 'குட்டிக் கேரளம்'

போபால் மாநிலத்தில் உள்ள மத்திய விவசாயப் பண்ணையில் குடியேற்றப்பட்டுள்ள திரு—கொச்சி நிலமில்லா விவசாயிகள், அந்தப் பண்ணையை ஒரு 'குட்டிக் கேரள'மாக ஆக்கியிருக்கின்றனராம்.

அவர்கள் அங்கு, மரவள்ளி உள்ளிட்ட திரு—கொச்சியில் விளையும் பொருள்கள் அத்தனையையும் பயிரிடுகின்றனராம்!

இந்தத் தகவலை உணவு இலாகா உதவி மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா, டெல்லி மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

சுமார் 119 பேர்கள் (நிலமில்லாதோர்) திரு—கொச்சியிலிருந்து அந்தப் பண்ணையில் குடியேற்றப்பட்டதாயும், அங்கு அவர்கள் நிரந்தரமாகத் தங்குவதற்கு முன்பாக, சிலகாலம் வேலை செய்து அங்கீகாரம் பெறவேண்டியவர்களாக இப்போது வேலை செய்து கொண்டிருப்பதாயும், மேலும் 81 பேர்கள் அங்கு சீக்கிரமே குடியேற்றப்படவிருப்பதாயும் அந்த மந்திரி கூறினாராம்.

"புதிய இடத்தில் அந்தத் தொழிலாளர்கள் மகிழ்ச்சியோடில்லை என்பது உண்மையா?" என்று கேட்கப்பட்டபோது, 'இல்லை' என அமைச்சர் மறுத்திருக்கிறார். தான் சமீபத்தில் அங்கு சென்றிருந்ததாயும், அப்போது அந்தப் பண்ணை செழிப்போடிருப்பதைத் தான் கண்டதாயும் அமைச்சர் தெரிவித்தாராம்.

### இந்தூரில் கடிகாரத் தொழிற்சாலை

#### மத்திய பாரத் சர்க்கார் துவங்குகிறது

இந்தூரில் ஒரு கடிகாரம் தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்துவதென, மத்திய பாரத் மாநில சர்க்கார் முடிவு செய்திருப்பதாக, சட்டசபையில் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### தென்னாட்டிற்கும் உண்டா?

கல்கத்தா, மார்ச் 14—

இந்தியாவில் முதன் முதலாக இரயில்களில் பேசும் படம் ('சினிமா') காட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம். அதற்கென தனியாகக் கட்டப்பட்ட ஒரு 'சினிமா'ப் பெட்டி சில இரயில்களுடன் இணைக்கப்படுமாம்.

ஐந்தாண்டுத் திட்டம், கலாச்சாரச் செய்திகள், இரயில்வே திட்டங்கள் ஆகியவை பற்றிய செய்திப் படங்கள் அப்பெட்டியில் திரையிடப்பட்டு மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுக்கும் காட்டப்படுமாம்.

### இன்ஷ்யூரன்ஸ் தேசியமயமானதின் எதிரொலி

#### ரூ. 15 லட்சம் பத்திரங்களுடன் நிர்வாகி கம்பி நீட்டினாராம்

புதுடில்லி, மார்ச் 14—

"ஆயுள் 'இன்ஷியூரன்ஸ் கம்பெனி'களை சர்க்காரே ஏற்று நடத்துவதற்கான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்பு 'இன்ஷியூரன்ஸ் கம்பெனி'களைச் சேர்ந்த ஆறு அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்."

என்று, மத்திய சர்க்கார் 'ரெவினியூ' இலாகா அமைச்சர் எம். சி. ஷா மாநிலங்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

ரூ 15 இலட்சம் பெறுமானமுள்ள பத்திரங்களுடன் ஒரு கம்பெனியின் 'மானேஜிங் டைரக்டர்' தலைமறைவாயிருக்கிறாரென்றும் அவர் குறிப்பிட்டார்.

## கழகச் செய்திகள்

### தேவரப்பன்பட்டி தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

5—3—56ல், தி. மு. கழகச் சார்பில் ஏ. வி. பி. முத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் பி. எம். பாலுசாமி, எம். பாஸ்கரன், கே. நடராசன், எஸ். இராமசாமி, சி. இருளப்பன் ஆகியோர் பிப். 20-ல், பொது வேலைநிறுத்தத்தில் அரும்பணியாற்றிய தோழர்களுக்குப் பாராட்டுதல் தெரிவித்துப் பேசினர்.

### குனியமுத்தூரில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

11—3—56 மாலை 6½ மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் தங்கமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன், சி. டி. தண்டபாணி, சே. அ. இராசமாணிக்கம் ஆகியோர், பிப். 20ல், தண்டோரா சர்க்கார் நடந்துகொண்ட முறைகளைக் கண்டித்துப் பேசினர்.

### மாநில மாநாடு நிதி

ஆமதாபாத் நகர தி. மு. கழகக் கிளையின் சார்பில், தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாடு நிதிக்கு ரூ. 168-6-0 கிளைக் கழகச் செயலாளர் தோழர் இரா. தணிகாசலம் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்டது—பெற்றுக் கொண்டோம்.

—தி. மு. க. தலைமை நிலையம்.

### புயல் நிவாரண நிதி

#### கழகத் தோழர்கள் முயற்சி

தமிழகப் புயல் வெள்ள நிவாரண நிதியாக கோவை நகர 30-வது வட்டம் செல்வபுரம் தோழர்களால் வசூலிக்கப்பட்ட ரூ. 28-9-0 தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நிதி விவரம்:—தோழர் கே. மாணிக்கம் ரூ. 1—4—0; ரூ. 1 கொடுத்தவர்கள்: தோழர்கள் தெ. ம. குப்புராசு, ஆர். வெள்ளிங்கி, கே. பெருமாள்சாமி, பி. எம். கே. சாமி, அந்தோணி, எம். வேலுசாமி, பி. சுந்தரம், செல்லப் பெருமாள், எம். கிருஷ்ணசாமி, வி. இராஜரத்னம், பி. கே. நடராசன், கோ. இராமசாமி, கே. பி. சுந்தரம்; தோழர் எம். வெள்ளிங்கிரி அணா 8; தோழர் பொ. தட்சிணாமூர்த்தி அணா 8.

மொத்தம் ரூ. 15—4—0; உண்டியல் மூலம் வசூல் செய்தது ரூ. 8—4—9 ஆக மொத்தம் 23—8—9, பெற்றுக்கொண்டோம்.

—தி. மு. க. தலைமை நிலையம்.

### அன்பளிப்பு

பழவேற்காடு இளைஞர் முற்போக்குக் கழகத்தின் சார்பாக பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மூலமாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தந்த ரூ. 13—1—6-ம் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

### திருமணம்

11—3—56 காலை 10 மணியளவில், கொரடாச்சேரியில், தோழியர் சரசுவதி—திருச்சி தோழர் இராமச்சந்திரன் (ஓவியர்) திருமணம் மணமகன் இல்லத்தில், தோழர் டி. கோவிந்தராசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எம். வைத்திலிங்கம், டி. கே. சீனிவாசன் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு மணமக்களால் ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

### சென்னை 17-வது வட்டம், தி. மு. கழகம்

4—3—56ல், நடைபெற்ற சென்னை தி. மு. கழகச் செயற்குழு கூட்டத்தில், வரவு—செலவு கணக்குச் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், கிளைக் கழக உறுப்பினர்களிடம் நிதி வசூலித்த நிதி [illegible]மையைச் சரி செய்வதென [illegible]னிக்கப்பட்டது.

### [illegible]ன்னை 28-வது வட்ட தி. மு. கழகம்

11—3—56 மாலை 4½ மணிக்கு பொம்மு செட்டி தெரு, 11-ம் எண்ணுள்ள இல்லத்தில் தோழர் சி. டி. டி. அரசு தலைமையில், மேற்படி வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது செயலாளரின் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு புதிய செயலாளராக லோகநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் மாவட்டச் செயலாளர் கழகப் பணி குறித்து விளக்கவுரை ஆற்றினார்.

### சென்னை 24-வது வட்ட தி. மு. கழகம்

பொதுச்செயலாளர் அறிக்கைக்கு இணங்க, இதுவரையில் மேற்படி வட்டத்தில் இயங்கி வந்த 'திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம்' என்ற அமைப்பைக் கலைத்துவிட்டு, அக்கழகத்தை இவ்வட்ட தி. மு. க. கிளையில் இணைத்துவிடுவதென்று திராவிட இளைஞர் முன்னேற்றக் கழக பொது உறுப்பினர் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. தி. இ. மு. க. அலுவலகத்தில் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக படிப்பகம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

### சென்னை 27-வது வட்ட புதிய தி. மு. கழக கிளை துவக்கம்

11—3—56 பிற்பகல் 3 மணிக்கு சென்னை 27-வது வட்ட (எடப்பாளையம்) கிளையின் அமைப்புக் கூட்டம் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையிலும், தோழர் இளம்பரிதி முன்னிலையிலும் பொம்மு செட்டி தெரு, 11-ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது, செயலாளராக தோழர் டபிள்யு. பி. பி. சுந்தரம்; துணைச் செயலாளராக தோழர் ஆ. இராசன்; பொருளாளராக தோழர் இராசலிங்கம்; மாவட்டப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் டபிள்யு. பி. பி. சுந்தரன், ஆ. இராசன் ஆகியவர்களும் எட்டு பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், தோழர்கள் இளம்பரிதியும், செங்குட்டுவனும் கிளைக் கழகம் இயங்கவேண்டிய முறைகளை விளக்கினர்.

### முதலியார்பேட்டை தி. மு. கழக ஆண்டுவிழா

11—3—56 மாலை 6-30 மணியளவில், புதுவை—முதலியார்பேட்டை தி. மு. கழக ஆண்டுத் துவக்க விழா, தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், கழகக் கொள்கைகளை விளக்கியும், மொழிவழி மாநிலப் பிரிவு—கூட்டணி மேற்கொண்ட நடவடிக்கை ஆகியவற்றைப் பற்றி விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

அவருக்குக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும், வைரநித்தணிகளும் அணிவிக்கப்பட்டன.

# ‘சிரிக்கத் தெரிந்தவன் தமிழ் மகனே!’

## ‘வடநாட்டாருக்கு சிரிக்கத் தெரியாது; சிரித்தாலும் அது வியாபாரமாகவே இருக்கும்’

### மூன்றாவது பொன்னாடை போர்த்தும் விழாவில் கலைவாணர்

“கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு தமிழகத்தில் மூன்றாவதாகப் பொன்னாடை போர்த்தும் விழா, எட்டயபுரம் [illegible] மணிமண்டப நிர்வாகக[illegible] வினரால்—என்னுடைய [illegible] மையில் நடைபெறுகி[illegible] என்பதை எண்ண, எண்ண[illegible] எனது இதயத்தில் மகிழ்ச்சி பொங்கித் ததும்புகிறது. நடிகர்களுக்கெல்லாம் அவர் அண்ணா! நகைச்சுவை மூலம் நாட்டில் பகுத்தறிவுக் கொள்கைகளை பரப்பி, காலத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை மக்கள் வெறுக்க—விட்டொழிக்கச் செய்கிறார். நகைச்சுவை மூலம் பயனுள்ள கருத்துக்களைத் தந்து, மக்களை சிரித்துச் சிந்திக்கவைக்கிறார். அவரது துணைவியார் தோழியர் டி. ஏ. மதுரம் அவர்களுக்கும் தமிழர்கள் காட்டும அன்பு எல்லையில்லாதது; இணையற்றது!”

என்று, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தும் விழாவில் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

11—3—56 காலை 10½ மணிக்கு எட்டயபுரம் பாரதமாதா தியேட்டரில், பாரதி மணிமண்டப பராமரிப்புக் கமிட்டி சார்பில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தும் விழா புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் அ. சீனிவாசராகவன், சுப்பையா, சாமிநாதன் ஆகியோர், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் பொதுநலப் பணியைப் பாராட்டிப் பேசினர்.

தோழர் அ. சீனிவாசராகவன், கலைவாணருக்குப் பொன்னாடை போர்த்தினார்.

தி. மு. கழகத்தின் சார்பில் கலைவாணருக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. மற்றும் பல மன்றங்கள், சங்கங்கள் சார்பில் என். எஸ். கே. அவர்களுக்கு வாழ்த்து இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டது.

கலைவாணர் என். எஸ். கே. தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு—வரவேற்புக்கும், பொன்னாடை போர்த்தியவர்களுக்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“இது என் உடலுக்குப் போர்த்திய ஆடையல்ல, நகைச்சுவைக்குக் கிடைத்த கௌரவமாகவே நான் கொள்கிறேன். இன்று உலகம் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்கத் துவங்கிவிட்டது. சென்ற ஆண்டு உலக சமாதான சேவையின் பெயரால் சார்லி—சாப்ளினுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டபோதே நாங்கள் எல்லாம் பெருமைப்பட்டோம்.

“சிரிக்கும் சக்தி மனிதனுக்குத்தான் உண்டு; அதுவும் தமிழனுக்குத்தான் உண்டு. வடநாட்டாருக்குச் சிரிக்கத் தெரியாது. சிரித்தாலும் அது வியாபாரச் சிரிப்பாகவே இருக்கும்.

“சிரிக்கத் தெரியாதவன் பெரும் பணக்காரனானாலும் அவன் ஆண்மையில் தரித்திரன்தான்! போதுமென்பவனுக்குத்தான் எல்லாம் கிடைக்கிறது.

“ஒரு காலத்தில் எங்களையெல்லாம் யாராவது பாராட்டமாட்டார்களா—கௌரவம் கொடுக்க மாட்டார்களா என எண்ணியதுண்டு; அப்போது யாரும் என்னவென்று கேட்கவில்லை. இப்போது நான் இதற்கெல்லாம் ஆசைப்படவில்லை; கிடைத்தது போதுமென்கிறேன். எல்லோரும் கொடுக்கிறார்கள். நீங்களும் வேண்டாம் என்று கூறுங்கள் வேண்டியது கிடைக்கும்.”

இறுதியாக விழாவிற்கு தலைமை தாங்கிய எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், கலைவாணரின் கலைத் தொண்டுகளைப் பாராட்டிப் பேசினார்.

# உறுப்பினர் வாரக் கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர்

### சைதையில் சிறப்பான நிகழ்ச்சி

திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர் சேர்ப்பதற்காகக் கொண்டாடப்படும் உறுப்பினர் வாரத்தை ஒட்டி, சென்னை 47-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், சைதாப்பேட்டை தர்மராஜா கோவில் மைதானத்தில் 15—3—56 அன்று ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி கூட்டத்திற்குத் தலைமை ஏற்று, தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிக் கூறி கழகத்தில் நாட்டு மக்கள் பெருவாரியாக உறுப்பினர்களாகி, கழகத்தை வலுப்படுத்த வேண்டியதின் அவசியத்தை எடுத்துக் காட்டினார்.

அடுத்து தோழர் கண்ணதாசன், கழகத்தின் வளர்ச்சி குறித்தும், வளர்ச்சி ஏற்பட்ட வகை குறித்தும் விரிவான விளக்கம் தந்தார். வளர்ந்துவரும் கழகத்தில் உறுப்பினர்களாக வேண்டியதின் அவசியத்தை உணர்த்தினார்.

இறுதியாக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தற்கால அரசியல் நிலைகளை விளக்கி, இன்றைய நிலையில் தி. மு. கழகம் மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கிற்கு அதன் கொள்கைகளே காரணம் என்பதை எடுத்துக்காட்டி, நாட்டு மக்கள் கழகத்தில் பெருவாரியாக உறுப்பினர்களாவதின் மூலம் கழக வளர்ச்சிக்கு பெரும் ஆதரவு தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

தலைவர் முடிவுரையுடன், நன்றி கவிக் கூட்டம் இரவு 9 மணிக்கு சிறப்பாக முடிவுற்றது.

## சீனக் குடியரசுத் தலைவரின் தலைமீடு

### விரும்பவில்லையென அறிவிப்பு

‘மலேயாவில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக அமுலில் உள்ள அவசர கால நிலப்பிரகடனம் குறித்து, சீனக் குடியரசுத் தலைவரான மாசே-துங்கின் தலைமீட்டை நான் விரும்பவில்லை’ என தெங்கு அப்துல் ரெஹ்மான் தெரிவித்திருக்கிறார்.

சட்டசபை ஒத்திவைப்பின் போது பேசிய அவர், ‘கம்யூனிஸ்டுகள் சீனாவிலிருந்து உத்தரவுகளுக்கு எதிர்பார்த்துக்கிடப்பார்களானால், அவர்கள் இந்த நாட்டிற் குறியவர்களல்லர் — வெளிநாட்டுடன் தொடர்புகொண்டவர்கள் என்பது தெளிவாகத் தெரியவரும்; அப்படியானால் அவர்கள் தாங்கள் விரும்பும் நாடுகளுக்கே சென்று விடுவது நமக்கு மகிழ்ச்சி தரத்தக்கதாகும்; அவர்களைத் தாங்கள் விரும்பும் நாட்டுக்கு அனுப்பிவைக்கவும் நாம் உதவுவோம்,’ என்றும் குறிப்பிட்டார்.

மேலும் சட்டசபை, லண்டனில் மலாயா சுதந்திரம் பற்றி பிரிட்டிஷாருடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையையும் அங்கீகாரம் செய்திருக்கிறதாகத் தெரியவருகிறது.

# வேலூர் தோழர்கள் மீது வழக்கு

## விடுதலை செய்துவிட்டு மீண்டும் வழக்குப் பதிவு செய்தார்களாம்

பிப். 20—பொது வேலைநிறுத்தத்தை ஒட்டி வேலூர்—சேலத்தில் கைது செய்யப்பட்ட 14 தோழர்களும் 22-2-56-ல் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், 13-3-56-ல் பரமத்தி ‘சப்-மாஜிஸ்திரேட்’ முன்னிலையில் வருமாறு மேற்படி தோழர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டது. தோழர்களும் அவ்வேளே சென்றனர். ‘மாஜிஸ்திரேட்,’ நகல் ஒன்றைத் தோழர்களிடம் தந்து, அதுபற்றி தோழர்களின் கருத்தையறிந்தும் அவர்களை மீண்டும் 20-3-56-ல் பரமத்தி நீதி மன்றத்திற்கு வரும்படி உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட தோழர்கள் :—வி. ஏ. இராமநாதன், பி. கருப்பண்ணன், வி. ஏ இலக்குமணன், எம். கருப்பண்ணன், ஆர். ரத்தினசபாபதி, பி முஸ்தபா, ஏ. மாரியப்பன், என். சையத்பீர், எஸ். பி. கருணாகரன், என். கணேசன், ஆர். பழனியப்பன் பி. செங்காளி, வி. மருதப்பன், கே. பொன்னுசாமி ஆகியோர்.

# இலங்கையிலிருந்து துரத்தப்படுவோர்

## எண்ணிக்கை தருகிறார் நிதிமந்திரி

“1954 அக்டோபர் திங்கள் 19-ந் தேதியிலிருந்து 1956 பிப்ரவரி திங்கள் 19-ந் தேதி வரை இலங்கையிலிருந்து சென்னை மாநிலத்திற்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை 21955; இவர்களில், ‘வெளியேறுங்கள்’ என்ற இலங்கை சர்க்காரின் ‘உத்தரவை’ப் பெற்று திரும்பியவர்கள் 7597”

என்ற தகவலை நிதி மந்திரி சுப்பிரமணியம் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

“இலங்கை சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடத்தும் மத்திய சர்க்காரின் பல்வேறு இலாகாக்களும் சென்னை சர்க்காருக்கு நிலைகளைத் தெரிவித்துக் கொண்டிருப்பதால், மத்திய சர்க்காருடன் நாம் ‘போராட’த் தேவை இல்லை”

என்றும், உபகேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது அவர் குறிப்பிட்டாராம்!

## கோவையில் அண்ணா ஈ. வெ. கி. சம்பத்

18—3—56 காலை 9 மணியளவில், கோவை நகர தி. மு. கழக நிதிக்காக சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

அண்ணா, ஈ. வெ. கி. சம்பத் சிறப்பு சொற்பொழிவாற்றுவர்.

இசைச் செல்வி ஜி. கஸ்தூரி இன்னிசை வழங்குவார்.

கட்டணம் ரூ. 1; அணா 8.

குறிப்பு : அன்று மாலை பொதுக் கூட்டம் இல்லை.

## உறுப்பினர் வாரக் கூட்டம்

திரு. வி. க. திடல்
(சான்ரான்ஸ்மித் நகர்)

18—3—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
டி. நடராசன்

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
இளம்பரிதி
டி. எஸ். சண்முகம்
—19-வது வட்ட தி. மு. க.

## சர்க்கார் மருத்துவமனைத் தொழிலாளரிடை பொதுச்செயலாளர்

சென்னை சர்க்கார் மருத்துவமனை தொழிலாளர் பொதுக்கூட்டம் ஒன்று 17—3—56 மாலை 7 மணியளவில், நேப்பியர் பூங்கா மைதானத்தில் நடைபெறும்.

தோழர் வி. சக்கரை (செட்டியார்) எம்.எல்.ஏ. தலைமை தாங்குவார்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், சென்னை சட்டசபை உறுப்பினர்கள் டாக்டர் பி. வரதராசுலுநாயுடு, ப. ஜீவானந்தம், ஏ. கோவிந்தசாமி, ஏ. இரத்தினம், கே.பி. கோபாலன், கே. டி. ராஜு ஆகியோர் பேசுவர்.

மாலை 5-30 மணியளவில் ஆஸ்பத்திரி தொழிலாளர் ஊர்வலம் ஒன்று ஸ்டான்லி மருத்துவமனையிலிருந்து புறப்பட்டு கூட்டம் நடைபெறும் இடத்தை அடையும்.

## சென்னை நகரசபை வரவு-செலவுத் திட்டம்

### ரூ. 16 இலட்சம் உபரி வருமானம்

சென்னை நகர சபையின் வரவு-செலவுத்திட்டம் தாக்கலாகியிருக்கிறது.

1956-57-ம் ஆண்டிற்கான அந்தத் திட்டத்தில் ரூ 16. இலட்சம் உபரி வருமானமிருக்கிறது.

வருமானம், ரூ. 2,74,82 640 என்றும், செலவு ரூ 2,73,22 210 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

புதியவரி விதிப்பு ஏதும் உத்தேசிக்கப்படவில்லை; சைகிள் வரி ரத்து செய்யப்படுகிறது.

## கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராக அணிவகுப்பு

“நம் நாட்டில் இன்று நிலவிவரும் அரசியல், பெருளாதார, சமூக சூழ்நிலைமைகள் குறித்து விவாதிக்கவும், மார்க்சிய சித்தாந்தங்களை தமது நடைமுறை சித்தாந்தமாக மதித்து நடக்கும் நம் போன்ற இடதுசாரி மனோபாவங்கொண்டுள்ள வாலிபர்களை ஒன்று திரட்டி, ஒரு ஸ்தாபனம் அமைக்கவும் 18—3—56 பிற்பகல் 4 மணியளவில், சென்னை 1-வது வட்டம் புதுவண்ணை, ராஜகுமார் பாடசாலை (வாஷர் வரதப்ப மேஸ்திரி தெரு, கடைசியில் உள்ளது)யில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்துள்ளோம் அவ்வமயம் பொது வாழ்வில் சிரத்தையுள்ள முற்போக்காளர் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் அளிக்குமாறு மிக பணிவன்போடு கோருகின்றோம்,”

என்று தோழர்கள் வே. திரு. அரசு, மா. இராசகோபால், மதுரை, எஸ். கே. தனுஷ்கோடி, எம். குப்புசாமி, தாமோதரம் ஆகியோர் அறிவிக்கின்றனர்.

## சென்னை 38-வது வட்ட தி.மு.க. உறுப்பினர் வாரக் கூட்டம் — பொதுச்செயலாளர் படத் திறப்பு

18—3—56 மாலை 6 மணியளவில், புதுப்பாக்கம் கழகப் பணிமனையில் தோழர் எம் கே. சாமி தலைமையில் தி. மு. கழக உறுப்பினர் வாரக் கூட்டமும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் படத்திறப்பு விழாவும் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

## சென்னை 40-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு :

18—3—56 காலை 11 மணியளவில், சேப்பாக்கம், லால்பேகம் தெரு, எண் 4-ல், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பல முக்கிய பிரச்சினைகள் பற்றி ஆராய்ப்படும்.

குறிப்பு:—இவ்வட்டத்திலுள்ள கழகப் பற்றுள்ளவர்களும், கழக உறுப்பினர்களும், மேற்படி முகவரியில், தங்களை உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

## வாழ்க்கை ஒப்பந்தம்

18—3—56 மாலை 6 மணியளவில், சென்னை—மூலக்கொத்தளம் பண்டிதர் கொள்ளாபுரிநகர் எண் 81 இல்லத்தில், தோழர் வி. முனுசாமி எம்.சி. தலைமையில், தோழர் ஏ. துரைசாமி—தோழியர் எம் மின்னலா அம்மை திருமணம் நடைபெறும். தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், கே. எம் கண்ணபிரான், சி. ஆர். பாலசுந்தரம், கே. ராமலிங்கம், ஜே எஸ். ராசன், மு. மா முத்து வாழ்த்துரை வழங்குவர்.

## திருவள்ளுவர் முன்னணி கழகம்

18—3—56 மாலை 7 மணியளவில், சென்னை—பழையவண்ணையம்பதி, அம்மையப்ப முதலித் தெருவிலுள்ள மேற்படி கழகச் சார்பில், தோழர் கி. ஞானக்கிள்ளி தலைமையில் ‘என் தலைவர்’ எனும் பொருள்பற்றி கழகத் தோழர்களும், மன்றத் தோழர்களும் பேசுவர்.

## சென்னை கல்விச் சங்கம்

18—3—56 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில் ‘குறிப்பறிதல்’ எனும் பொருள்பற்றி திரு. க. வீ. குருசாமி தலைமையில் திரு. வ. சுப்பிரமணியம் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.